RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 63 | மார்ச்.12 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி சாதாரண சாதனை அல்ல; முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: மார்ச்.12-

''உலகிலேயே கடினமான யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றிருக்கும் அனைவருக்கும் எனது பாராட்டுகளும், வாழ்த்துகளும். நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை அல்ல'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த காலங்களில் தமிழகத்தில் இருந்து யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெறுவோர் எண்ணிக்கை குறைந்து வந்தது. திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் இதை உடனடியாக சரி செய்ய முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கான பலன் தற்போது கிடைத்துள்ளது.

மகிழ்ச்சி

இந்த ஆண்டு தமிழகத்தில் இருந்து இந்திய குடிமைப் பணிக்கு தேர்வாகியுள்ள 60 பேரில் 56 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயன்பெற்றவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த எண்ணிக்கை மேலும் கூட வேண்டும். தமிழகத்தில் இருந்து பல இளைஞர்கள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கு சென்று எளிய மக்களுக்காக பணியாற்ற வேண்டும். நாடுகளுக்கு இடையிலான உறவையும் மேம்படுத்த வேண்டும்.

கடினமான தேர்வு

குடிமைப்பணி தேர்வில் கடுமையான உழைப்பை கொடுத்து வெற்றி பெற்றுள்ள உங்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும். நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை அல்ல; உலகளவில் மிகவும் கடினமான தேர்வு யுபிஎஸ்சி. தேர்வுக்கு தயாராகவே மன வலிமை, ஒழுக்கத்தை சோதித்துப் பார்க்கும் அளவு கடுமையானது.



நிறைவேற்றுங்கள்

உங்கள் கனவு நிறைவேறி விட்டது. இனி மக்கள் கனவுகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் எவ்வளவு பிஸியாக இருந்தாலும், குறைந்தபட்சம் ஒரு போனாவது செய்து அப்பா, அம்மாவிடம் நலம் விசாரியுங்கள். இந்த அக்கறையும், அன்பும்தான் உங்களுடைய Career முன்னேற்றத்துக்கு துணையாக இருக்கும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

சென்னையில் நடந்த அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கு பாராட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சி தினமலர் யுடியூப் உள்ளிட்ட இணையத்தில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதுதான் வளர்ச்சி!

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: குடிசையில்லாத் தமிழகம் எனும் கனவை அடைந்திடும் நோக்கத்துடன் 1970ல் கருணாநிதி "தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்" உருவாக்கினார். திராவிட மாடல் ஆட்சியில் அதனை "நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனப் பெயர் மாற்றினோம். இது வெறும் பெயர் மாற்றமல்ல; செயலாற்றலில் புதுப் பாய்ச்சல் என நிரூபித்திருக்கிறோம். அதற்கான Data இதோ:

கடந்த 201621ல் அதிமுக ஆட்சிக்காலத்தில், இந்த வாரியத்தின் மூலம், சென்னை மற்றும் பிற மாவட்டங்கள் என மொத்தம் 27,668 குடியிருப்புகள்தான் உருவாக்கப்பட்டன. திராவிட மாடல் ஆட்சியில் சென்னை 30,167, மற்ற மாவட்டங்களில் 46,207, என மொத்தம் 76,374 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளோம். கடந்த ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒட்டுமொத்தக் குடியிருப்புகளின் எண்ணிக்கையைவிட, நமது ஆட்சிக்காலத்தில் சென்னையில் மட்டும் உருவாக்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகம்.

இதுதான் மாற்றம். இதுதான் வளர்ச்சி. இதுதான் செயலாற்றல். இதன் தொடர்ச்சியாக 700 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கொண்ட "முதல்வர் நகர்ப்புறக் குடியிருப்புகள்" உள்ளிட்ட திட்டப்பணிகளை இன்று தொடங்கி வைத்தேன். திராவிட மாடலின் 2.0 ஆட்சியில் இது இன்னும் பன்மடங்காகும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.




## "நூலிழையில் தப்பிய பள்ளி மாணவி; பேனர் வைப்பதில் கட்சிக்கு ஒரு நீதியா?" தவெக



சென்னை, மார்ச்.12- அனுமதியின்றி பேனர் வைத்து மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்த திமுக நிர்வாகிகள் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரத்தில், திமுக கூட்டணிக் கட்சியினர் வைத்திருந்த பேனர் சரிந்து விழுந்ததில், பள்ளி மாணவி ஒருவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டிய நிகழ்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நல்லவேளையாக, அந்த மாணவி உயிர் தப்பியுள்ளார். போக்குவரத்து மிகுந்த பேருந்து நிறுத்தத்திற்கு அருகில், முறையான அனுமதியின்றி, பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் இந்தப் பேனர் வைக்கப்பட்டிருந்தது குறித்து காவல் நிலையத்திலும், அரசு அதிகாரிகளிடமும் முன்பே புகார் அளித்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளது. ஆளுங்கட்சிக்குப் பயந்து பேனர் குறித்த புகார்களை அதிகாரிகள் தட்டிக்கழித்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. உரிய அனுமதி பெற்று தமிழக வெற்றிக் கழகத்தினர் வைக்கும் பேனர்களை எல்லாம் தேடிப்பிடித்து அராஜகமாக அகற்றும் அதிகாரிகள், தற்போது நடந்துள்ள இந்த விபத்துக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? கட்சிக்கு ஒரு நீதியா?

அனுமதியின்றி பேனர் வைத்து மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்த கட்சி நிர்வாகிகள் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும்பட்சத்தில், தவெக சார்பில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டுப் போராட்டம் நடத்தப்படும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 25 கிலோ கஞ்சா பறிமுதல் கடத்தி வந்த ஒருவர் கைது



மாதவரம், மார்ச். 12- ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் அரசால் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையிலான போலீசார் அம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது அங்கு சுற்றி திரிந்த சந்தேக நபரான திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பகுதியைச் சேர்ந்தவரான சூர்யபிரகாஷ் (வ/20) த/பெ ரவிக்குமார் என்பவரை விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் சோதனை செய்ததில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 25 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து கஞ்சாவை கைப்பற்றி சூரியபிரகாஷ்யை கைது செய்து மேலும் விசாரணை மேற்கொண்டதில் ஆந்திரா மாநிலம் விஜயவாடாவில் இருந்து கஞ்சாவை விற்பனைக்காக வாங்கி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து குற்றவாளி மீது அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.

## உ.பி.யில் உபெர், ஓலா போன்ற நிறுவனங்களுக்கு புதிய விதிமுறைகள்!

லக்னோ, மார்ச்.12- உத்தர பிரதேசத்தில் உபெர், ஓலா போன்ற நிறுவனங்களுக்கு புதிய விதிமுறைகள் அமல்படுத்தப்பட உள்ளது. இது, முதல்வர் யோகி ஆதித்யநாத் அரசின் புதிய நடவடிக்கையாக அமைந்துள்ளது.

உ.பி. மாநில அமைச்சரவை கூட்டம் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் உ.பி. மோட்டார் வாகன விதிகள் 1998ல் திருத்தம் செய்யும் மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன்படி உபெர், ஓலா போன்ற நிறுவனங்கள் மாநிலத்தில் நான்கு சக்கர வாகனங்களை இயக்குவதற்கு கட்டாய பதிவு மற்றும் உரிமங்களைப் பெற வேண்டும். இவற்றின் கட்டணங்களாக விண்ணப்பத்திற்கு ரூ.5,000, பதிவுக்கு ரூ.25,000 மற்றும் உரிமம் பெற ரூ.5 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமங்களைப் புதுப்பிக்க ரூ.5,000 கட்டணமாகச் செலுத்த வேண்டும். ஒரு நிறுவனம் எத்தனை வாகனங்களை வேண்டுமானாலும் இயக்கலாம். 50 முதல் 100 வாகனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களை இயக்கும் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம் ரூ.5 லட்சமாக இருக்கும்.

இதற்காக உ.பி. அரசு போக்குவரத்து கழகம் விரைவில் தனது சொந்த மொபைல் செயலியை உருவாக்க உள்ளது. இந்த செயலியில் அனைத்து நிறுவனங்களின் வாகன தகுதி, காவல் சரிபார்ப்பு, பதிவு மற்றும் பிற முக்கிய தகவல்களை வழங்க உள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு பிறகு மாநில போக்குவரத்து அமைச்சர் தயாசங்கர் சிங் கூறுகையில், "உபெர், ஓலா போன்ற நிறுவனங்கள் இனி உ.பி.யில் பதிவு செய்ய வேண்டும். 1988 மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 93ஐ மத்திய அரசு கடந்த வருடம் திருத்தியது. இதை ஏற்கும் வகையில் உ.பி அரசும் தனது விதிமுறைகளை மாற்றி அமைக்க உள்ளது" என்றார்.

மாநிலங்களில் உபெர், ஓலா போன்ற நிறுவனங்கள் இதுவரை ஒழுங்குபடுத்தப்படாமல் இருந்தது. தற்போது மத்திய அரசின் சட்டத் திருத்தத்துக்கு பிறகு அவை ஒழுங்குப்படுத்தப்படுகிறது. புதிய விதிப்படி வாகன ஓட்டுநர்களுக்கு மருத்துவ, காவல் துறை சரிபார்ப்பு மற்றும் உடற்தகுதி சோதனைகளையும் உ.பி. அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

## கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் மூன்றாவது முறையாக வெடிகுண்டு மிரட்டல்

கிருஷ்ணகிரி, மார்ச். 12- கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு நேற்று இ-மெயில் மூலம் இவ்வாண்டு மூன்றாவது முறையாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணகிரியில் ராயக்கோட்டை சாலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட முதன்மை நீதிமன்ற நிர்வாக அலுவலகத்திற்கு நேற்று காலை, 9.33 மணிக்கு இ-மெயில் வந்துள்ளது. அதில், நீதிபதிகளே, நீதிமன்ற அறைகளில் 15 சயனைடு வாயு நிரப்பப்பட்ட விஷ குண்டுகள் வெடிக்க உள்ளன. ஊழியர்கள், அப்பாவி மக்களை வாய் மற்றும் மூக்கை மூடி பிற்பகல் 1.10க்குள் வெளியேற்றுங்கள். சில குண்டுகள் ட்ரோன்கள் பயன்படுத்தி வெடிக்க வைக்கப்பட உள்ளன. விடுதலை புலி உறுப்பினர்கள், காஷ்மீர் ஐ.எஸ்.ஐ., உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர். மதியத்திற்கு மேல் வெடிகுண்டுகள் வெடிக்கும், என அந்த மெயிலில் இருந்தது.

இது குறித்து, மாவட்ட முதன்மை நீதிபதியின் நேர்முக உதவியாளர் செல்வகுமார் புகார்படி, கிருஷ்ணகிரி மாவட்ட வெடிகுண்டு கண்டுபிடிப்பு பிரிவு எஸ்எஸ்ஐ., கோவிந்தராஜ், வினோத்குமார், இளையவன் உள்ளிட்ட போலீஸ் குழுவினர் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் ஒவ்வொரு அறையாக சோதனை யிட்டனர். ஆனால் எந்த பொருளும் கண்டுபிடிக்கப் படவில்லை.

கிருஷ்ணகிரி நீதிமன்ற வளாகத்திற்கு இவ்வாண்டு கடந்த ஜனவரி மாதம் 6ம் தேதி மற்றும் பிப்ரவரி மாதம் 24ம் தேதி இதே போல் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. தற்போது மூன்றாவது முறையாக இந்த மிரட்டல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி சென்னை புழல் பகுதி 24 வார்டில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்





மாதவரம், மார்ச். 12- திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி சென்னை புழல் பகுதி 24வது வார்டு திருவீதியம்மன் கோயில் தெருவில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் 78 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டும் உலக மகளிர் தினத்தையொட்டியும் சுமார் 5000 மகளிர்களுக்கு புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவி வழங்கும் விழா 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் புழல் இ.சேட்டு ஏற்பாட்டில் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான மாதவரம் வி.மூர்த்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். பின்னர் சுமார் 5000 மகளிர்களுக்கு புடவை போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி மகளிர் தின வாழ்த்தினை தெரிவித்தார்.

இதில் மாதவரம் மேற்கு பகுதி செயலாளர் வேலாயுதம், மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பராஜ், மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் கருப்புக்கொடி ஏழுமலை, 23வது கிழக்கு வட்டசெயலாளர் இளங்கோவன், 23வது மேற்கு வட்டசெயலாளர் ராமு, பகுதி எம்.ஜி.ஆர். மன்ற தலைவர் இராவணன், பகுதி அம்மா பேரவை துணை செயலாளர்கள் சோபன், ரவீந்தர், வள்ளல், பாபு, ராஜேந்திரன், 24வது கிழக்கு வட்ட நிர்வாகிகள் ஆண்ரோஸ், மதிஒளி, சகிலா, வசந்தகுமார், 24 வது கிழக்கு வட்ட சார்பு அணி செயலாளர்கள் அம்மா பேரவை செயலாளர் பார்த்திபன், இலக்கியஅணி செயலாளர் விநாயகம், இளைஞர்அணி செயலாளர் ராகுலன், மாணவரணி செயலாளர் சரவணன், இளைஞர் இளம் பாசறை செயலாளர் பரத், எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர் மணி, தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அஜித் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தாம்பரத்தில் சமூகநீதி மாணவர் இயக்கம் சார்பாக இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



தாம்பரம் மார்ச். 12- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சமூகநீதி மாணவர் இயக்கம், செங்கல்பட்டு வடக்கு மாவட்டம், தாம்பரம் மத்திய பகுதி சார்பாக சமூகநீதி மாணவர் இயக்க மாநில பிரிதிநிதி ஜெய்னுலாபுதின் தலைமையில் அரசியல் பயிலரங்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது, இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைப்பொது செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான எம்.யாக்கூப் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வை தொடக்கிவைத்தார், மேலும் இந்த நிகழ்வில் சமூகநீதி மாணவர் இயக்க நிர்வாகிகள் இப்ராகிம், ஆருண், ஜமீலா, பஷீர், ஆகியோர் உட்பட ஏராளமானோர் கலந்துக்கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சமூகநீதி மாணவர் இயக்க மாநில பிரிதிநிதி ஜெய்னுலாபுதின் பேசுகையில் இந்த சமூக நீதி மாணவர் இயக்கம் சரியான அரசியல் பாதையை தீர்மாணிக்க கூடியவர்களாகவும், போதையின் பக்கம் உள்ள மாணவர்களை மீட்டெடுக்க கூடியவர்களாகவும், ஒரு ரசிகர் மோகத்தில் செல்ல கூடிய மாணவர்களை நல்வழிபடுத்தி வரலாறுகளை எடுத்துகூறி நேர்வழிபடுத்தி இந்த மாணவர் இயக்கம் பட்டை தீட்டி கொண்டு இருக்கிறது. எனவும் தமிழகத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் படித்து ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக உள்ளனர். திராவிட கழக ஆட்சியில் தான் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்கபட்டு அது முறையாக பின்பற்றபடுகிறதா என்பது கேள்வி குறியாக உள்ளது. அதன் வெள்ளரிக்கையை கேட்க கூடிய மாணவர்களாக இருக்கின்றோன் எனவும் திராவிட கழகத்தில் உள்ள மனிதநேய மக்கள் கட்சி கூட்டணிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கபட்டுள்ளது. எங்களுக்கு முக்கிய பிரதினுத்துவம் இல்லாவிட்டாலும் சமூக நீதி மாணவர் இயக்கத்தில் உள்ள அத்தனை மாணவர்களும் பயணிக்ககூடியவர்களாக இருக்கின்றோம் என தெரிவித்தார்.



## தாம்பரத்தில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் லட்சுமி ராஜா பத்திரிகையாளருடன் சந்திப்பு

தாம்பரம் மார்ச். 12- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் லட்சுமி ராஜா அவர்கள் அனைத்து பெண்களுக்கும் இலவசமாக சானிட்டரி நாப்கின் அரசு ரேஷன் கடைகளில் வழங்க வேண்டும் என்ற வழக்கு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு வழக்கறிஞர் லட்சுமி ராஜா அவர்களுடைய அலுவலகத்தில் நடைபெற்றது கடந்த 2025 ஜூலை மாதம் அனைத்து பெண்களுக்கு இலவசமாக சானிட்டரி நாப்கின் அரசு வழங்க வேண்டும் என்றும் எளிதாக கிடைக்க அரசு ரேஷன் கடைகளில் கிடைக்க வேண்டும் என்றும் வழக்கறிஞர் லட்சுமி ராஜா அவர்களாள் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டது அந்த வழக்கின் தீர்ப்பானது வரும் 29 ஏப்ரல் 2026 வரும் நிலையில் இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பல தகவல்களை தெரிவித்தார் 2019 முதல் தான் சமூக சேவையில் ஈடுபட்டு வருவதாகவும், கொரானா காலகட்டத்தில் பொது மக்களுக்கு அரிசி, பருப்பு போன்ற உணவு பொருட்கள் வழங்கி வந்த போது பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் தேவை பற்றாக்குறையாக இருந்ததாகவும், அன்று முதல் பெண்களுக்கு சான்டரி நாப்கின் அரசு இலவசமாகவும் எளிதாகவும் வழங்க வேண்டும் என்று போராடிக்கொண்டு வருவதாகவும், தமிழக அரசால் இயங்கப்படும் முதல்வர் மருந்தகத்தில் மானிய விலையில் சானிட்டரி நாப்கின்கள் விற்கப்பட்டாலும் போதுமான கடைகள் தமிழகத்தில் இல்லை, மேலும் தமிழக வெற்றி கழகம் அறிவிக்கப்பட்ட திட்டத்தில் 10 வது அறிவிப்பில் அரசு ரேஷன் கடையில் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்ஸ் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தது, ஒருவேளை தமிழக வெற்றி கழகம் எங்கள் பொது நல வழக்கு பற்றி த.வெ. க விஜய் அவர்களுக்கு தெரிய வந்திருக்கலாம் என்றும் ஏப்ரல் மாதம் வரவிற்கும் தீர்ப்புக்காக காத்திருப்பதாகவும் வழக்கறிஞர் லட்சுமி ராஜா அவர்கள் கூறினார்.

## கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூபாய் 2 கோடி முறைகேடு: விசாரணை நடத்திட முன்னாள் தலைவர் வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி, மார்ச். 12- கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.2 கோடி முறைகேடு நடந்துள்ளதாகவும், அதனை விசாரணை செய்ய வேண்டும் எனவும் முன்னாள் நகர்மன்றத் தலைவர் வலியுறுத்தினார்.

கிருஷ்ணகிரி முன்னாள் நகர்மன்றத் தலைவர் பரிதாநவாப் நிருபர்களிடம் கூறியதாவது: நான் நகராட்சி 1வது வார்டு கவுன்சிலராக உள்ளேன். கடந்த 9.2.2026 அன்று நகராட்சி சாதாரண கூட்டம் நடைபெறுவதாக எனக்கு 8ம் தேதி தகவல் தெரிவித்தனர். கூட்ட பொருளை இணைத்து அனுப்பி இருந்தனர். அதில் 1 முதல் 78 வரையில் பொருள் இருந்தது. அதில் பொருள் எண்கள் பல, ஒன்றுக்கு மேல் இருமுறை குறிப்பிடப்பட்டிருந்தது. நகர மக்களின் வரிப்பணம் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஊழல் முறைகேட்டிற்கு உதவும் வகையில் பொருள் எண்கள் பல முறை இரட்டிப்பு பதிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் கூட்டம் கூட 7 நாட்களுக்கு முன்பு அழைப்பானை அனுப்ப வேண்டும் என்பது விதியாகும். ஆனால் ஒரு நாள் முன்னதாக தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு ஒரே பணிக்கு வெவ்வேறு தொகைகள், ஒரு பொருளை ஆங்கிலத்திலும், தமிழிலும் மாறி, மாறி குறிப்பிட்டுள்ளனர். மொத்தம் ரூ.2 கோடியே 4 லட்சம் நகராட்சி பணம் முறைகேடாக கையாடல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குனர் மற்றும் நகராட்சி ஆணையாளர் கடந்த மாதம் 9ம் தேதி நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஒப்புதல் வழங்க கூடாது. இது தொடர்பாக விசாரணை நடத்தி ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள், துணைபோனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளர், நகராட்சிகள் நிர்வாக இயக்குனர், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளரிடம் புகார் மனு கொடுத்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகரிடம் கேட்ட போது, முன்னாள் நகர்மன்றத் தலைவர் கொடுத்த புகார் மனு தொடர்பாக விசாரித்து வருகிறேன். அன்றைய கூட்டத்தில் இருந்த தீர்மான பொருள்கள் தொடர்பாக ஆய்வு செய்து வருகிறேன் என்றார்.



## கிருஷ்ணகிரிக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சியர், மதியழகன் எம்.எல்.ஏ. ஆய்வு

கிருஷ்ணகிரி, மார்ச். 12-: கிருஷ்ணகிரிக்கு நாளை மறுநாள் வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சியை முன்னிட்டு நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வருகிற 13032026 அன்று மாலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்க உள்ளார். மேலும் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் கிருஷ்ணகிரி தேவராஜ் மகாலில் நடைபெறும் திமுக கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளை முன்னிட்டு நடைபெற்று வரும் மேடை அமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள், பொதுமக்கள் அமர்வு வசதி உள்ளிட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் மதியழகன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, ஆர்டிஓ ஷாஜகான், தாசில்தார் ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், பாப்பி பிரான் சிலினா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சங்கர், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு,நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# “தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து இபிஎஸ் முடிவெடுப்பார்” பியூஷ் கோயல்




திருச்சி, மார்ச்.12-

“தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து தமிழ்நாட்டில் என்.டி.ஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் பழனிசாமி தான் முடிவெடுக்க வேண்டும்” என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக் கூட்டணி பொதுக்கூட்டம் பஞ்சப்பூரில் இன்று நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர் ஜவுளி நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் டெல்லியிலிருந்து விமானம் மூலம் நேற்று இரவு திருச்சி விமான நிலையம் வந்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இந்தியாவில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு இல்லை. ஊடகங்கள் தான் எரிவாயு தட்டுப்பாடு என்கிற செய்தியை பரப்புகின்றன. அதன் அடிப்படையில் நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள். எரிபொருள் இருப்பு குறித்து அந்த துறை விரிவான அறிக்கையை விரைவில் வெளியிடும். தேஜ கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும்.

தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து தமிழ்நாட்டில் என்டிஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் பழனிசாமி தான் முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, காமராஜ், வெல்லமண்டி நடராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஈரானில் பெய்யும் கருப்பு மழையால் சுவாச பிரச்சினைகள் அதிகரிக்கும்: உலக சுகாதார மையம்



ஜெனிவா, மார்ச்.12-

ஈரானில் கருப்பு மழை பெய்த நிலையில், “கருப்பு மழையும் அதனுடன் கலந்து வரும் அமிலமும் மக்களுக்கு ஆபத்தானது. குறிப்பாக சுவாச பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது” என்று உலக சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

கடந்த திங்கள் கிழமை, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் எண்ணெய் சேகரிப்பு மையமும் தாக்கப்பட்டதை அடுத்து, அவை தீப்பிடித்து எரியத் தொடங்கின. இதனால், தலைநகரை கருப்புப் புகை மூடியது. இதையடுத்து பெய்த மழை, கருப்பு நிறுத்தில் இருந்துள்ளது.

காற்றில் கருந்துகள்கள் கலந்துள்ளதாலும் கருப்பு மழையுடன் அமிலம் கலந்து இருப்பதாலும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று ஈரான் அரசு, அறிவுறுத்தியது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து தெஹ்ரானில் உள்ள தனது அலுவலகத்துடன் இணைந்து உலக சுகாதார மையம் ஆய்வு மேற்கொண்டது. இதையடுத்து ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசிய உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டியன் லிண்ட்மியர், ‘‘கருப்பு மழையும் அதனுடன் வரும் அமில மழையும் மக்களுக்கு ஆபத்தானது. குறிப்பாக சுவாச பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது. ஈரான் மக்கள் வீட்டிற்குள் இருக்க வேண்டும் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளதற்கு உலக சுகாதார மையம் ஆதரவு அளிக்கிறது.

தாக்குதல்களால் எண்ணெய் சேமிப்பு நிலையங்களிலும் சுத்திகரிப்பு நிலையங்களிலும் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளதால், காற்றின் தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விஷத்தன்மை நிறைந்த ஹைட்ரோகார்பன்கள், சல்பர் ஆக்சைடுகள் மற்றும் நைட்ரஜன் சேர்மங்கள் அதிக அளவில் காற்றில் வெளியேறியுள்ளன’’ என தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து அறிவியலாளர்கள் கூறும்போது, ‘‘இந்த புகை அல்லது தூசித் துகள்களை மூச்சில் இழுப்பதாலும், அவை தோலில் படுவதாலும் தலைவலி, கண் எரிச்சல், தோல் எரிச்சல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். நீண்ட காலம் இவ்வாறான சுகாதாரமற்ற காற்றை சுவாசித்தால், சில வகை புற்றுநோய்கள் ஏற்படுவதற்கான அபாயமும் உள்ளது’’ என தெரிவித்துள்ளனர்.

கருப்பு மழை எப்படி உருவானது?: வானிலை மாற்றம் காரணமாக மழை பெய்யும்போது காற்றில் இருந்த எண்ணெய் மற்றும் புகை துகள்களுடன் அது கலந்து “கருப்பு மழை” உருவானதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து ரீடிங் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் அக்ஷய் தியோராஸ் கூறுகையில், “இந்த மழை மக்களுக்கு ஒரு எச்சரிக்கையைப் போன்றது. விஷமயமான காற்றில் நீண்ட காலமாக இருப்பதே பெரிய சுகாதார ஆபத்து. மக்கள் வீட்டுக்குள் இருப்பது, வெளியே செல்லும்போது முகக்கவசம் அணிவது, தோலை மூடுவது போன்ற முன்னெச்சரிக்கைகளை எடுத்தால் ஆபத்தை குறைக்கலாம். புதிய தாக்குதல்கள் இல்லாவிட்டால் காலப்போக்கில் காற்றின் தரம் மேம்படும்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.



# லயன்ஸ் சங்கம் 3241ஏ மண்டலம் 7 மண்டல மாநாடு

மாதவரம், மார்ச். 12-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சி தனியார் மண்டபத்தில் லயன்ஸ் சங்க மாவட்டம் 3241 ஏக்குட்பட்ட மண்டலம் 7 மண்டலத் தலைவர் அரி.பிரபாகர் கௌரி தலைமையில் மண்டல மாநாடு நடைபெற்றது.

மண்டலம் 7 வட்டார தலைவர்கள் மந்திரமூர்த்தி, பாலாஜி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.விழாவிற்கு மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.பின்னர் எஸ்ஆர்.எஸ். ஷிப்பிங் பிரைவேட் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் மோகன கிருஷ்ணாராவ்வுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.மாவட்ட ஆளுநர் மணிசேகர், மண்டல தலைவரின் செயல்பாடுகளையும் அவரின் கீழ் செயல்படும் வட்டார தலைவரின் செயல்பாடுகளையும் அனைத்து சங்கங்களின் தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் மாவட்டத் தலைவர்களின் செயல்பாடுகளையும் எடுத்துரைத்து அங்கீகரித்து பாராட்டி ஆளுநர் பதக்கம் அணிவித்தார்.மேலும் கூட்டு மாவட்ட தலைவரும் உடனடி முன்னாள் ஆளுநருமான ரவிச்சந்திரன், முதல் துணை ஆளுநர் நரசிம்மன், இரண்டாம் துணை ஆளுநர் ஜெயக்கொடி, சேர்மன் ஸ்ரீதரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். இதில் மாவட்ட முதன்மை நிர்வாகிகள் பாலாஜி, ராஜேஷ், பாபு, சரவணன், கண்ணன், கல்யாண சுந்தரம், பூபதி, லோகநாதன், ரத்தினவேல், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் துளசிங்கம், ரவீந்திரன், நகின், பொன்ராஜ் அசோக், விஜயகுமார், ராஜபாண்டியன், மாவட்ட ஆலோசகர்கள் ஆவடி முருகன், ஸ்ரீனிவாசராவ், ருக்மாங்கதன், மாவட்ட நிர்வாகிகள் கேஎம்ஜி. அசோக், பாலசுப்பிரமணியன், பச்சையப்பன், செல்வராஜ், தனசேகர், ஜெயஸ்ரீ மனோகரன், கிருஷ்ணமூர்த்தி, சங்கரி தனசேகரன், முனுசாமி, சண்முகம், மண்டல தூதுவர் பரணிதரன் உள்ளிட்ட மண்டல தலைவர்கள், வட்டாரத் தலைவர்கள், மாவட்ட தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிருஷ்ணகிரிக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை பிரம்மாண்ட வரவேற்பு அளிக்க அழைப்பு

## மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை



கிருஷ்ணகிரி, மார்ச். 12-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வரும் 13ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திமுக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 13ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார் என தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட பையூர் கிராமத்தில் திமுக கொடியை ஏற்றி வைக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்வார். தொடர்ந்து கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி நகரில் உள்ள தேவராஜ் மஹால் திருமண மண்டபத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகளுடனான சந்திப்பு கூட்டத்திலும் துணை முதலமைச்சர் கலந்து கொண்டு ஆலோசனை நடத்த உள்ளார்.

மேலும் 13ஆம் தேதி இரவு கிருஷ்ணகிரியில் தங்கும் அவர், 14ஆம் தேதி காலை 9 மணிக்கு பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒப்பத்தவாடி கிராமத்தில் திமுக கொடியை ஏற்றி வைக்கிறார். பின்னர் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு சென்று அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளார்.

இதையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு, வட்ட மற்றும் கிளை செயலாளர்கள், BLA-2, BLC, BDA, வாக்குச்சாவடி முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் 13ஆம் தேதி மதியம் 3 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட எல்லையான பையூரில் திரண்டு வந்து துணை முதலமைச்சருக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளித்து அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என மதியழகன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு

# தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் மத்திய பாதுகாப்பு படையினருடன் கலந்தாய்வு கூட்டம்

தேனி மார்ச். 12-

இக்கூட்டத்தில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா தலைமையில் மத்திய பாதுகாப்பு படையினருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் தேர்தல் காலத்தில் மத்திய பாதுகாப்பு படையினர் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் விதிமுறைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள், ரோந்து பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் பணிகள் முழுமையாக சீராக நடைபெறவும், பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் சூழலை உருவாக்கவும் காவல்துறையினரும் மத்திய பாதுகாப்பு படையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

# போடிநாயக்கனூர் நூலகத்திற்க்கு பூமி பூஜை






போடிநாயக்கனூர் மார்ச். 12-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகரில் அமைந்துள்ள நூலக கட்டிடமானது கடந்த வாரம் இடித்து அப்புறப்படுத்தப்பட்ட பின்பு இன்றைய தினம் பூமி பூஜை ஆனது சுமார் 95 லட்சத்தில் கட்டிட பணியானது பெரும் முயற்சி எடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் போடிநாயக்கனூர் நகர மன்ற தலைவர். ராஜ ராஜேஸ்வரி, மற்றும் நகர் திமுக செயலாளர் திருவாளர் பி புருஷோத்தமன் முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் திருவாளர் எம் சங்கர் அவர்கள் முன்னிலையில் இன்றைய தினம் பூமி பூஜை ஆனது வெகு விமர்சியாக நடைபெற்றது.

இந்த பூமி பூஜையில் இந்த பகுதியின் நகர்மன்ற உறுப்பினர்.வாளர் ராஜா, PSP. மகேஸ்வரன், நூலகர். மாரிமுத்து கவிதா மற்றும் கையிலே பில்டர்ஸ், நகர் மாணவரணி துணைச் செயலாளர்.எஸ் லோகேஸ்வரன் திமுக பிரமுகர் மகேந்திரன் , குருசாமி, பாலமுருகன் பாண்டியன், மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் நகராட்சி அதிகாரிகள் நூலகத் துறையின் அதிகாரிகள் மற்றும் இங்கே படிக்கும் மாணவ மாணவியர்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்த பூமி பூஜையை சிறப்பித்தனர்.

# எல்பிஜி சிலிண்டர் நெருக்கடி நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்




புதுடெல்லி, மார்ச்.12-

நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் இதில் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், “வணிக பயன்பாட்டுக்கு எல்பிஜி சிலிண்டர்களை வழங்க வேண்டாம் என்று எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது. நிலைமை நாள்தோறும் மோசமாகிறது. மத்திய அரசு நாட்டு மக்களிடம் பொய்களைக் கூறி வருகிறது” என குற்றம் சாட்டினார்.

மற்றொரு காங்கிரஸ் எம்.பி. கே. சுரேஷ், “நாட்டில் சிழிநி நெருக்கடி மிகவும் தீவிரமாக உள்ளது. உண்மையான நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை. பல ஹோட்டல்கள் மற்றும் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை என்று அரசு கூறுகிறது. ஆனால் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் நிலைமை தீவிரமாக இருப்பதாகக் கூறுகின்றனர். அரசு மக்களை தவறாக வழிநடத்துகிறது” என குறிப்பிட்டார்.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா (UBT) எம்.பி. பிரியங்கா சதுர்வேதி, “ஈரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வந்தது. போர் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நமது பிரதமர் இஸ்ரேலுக்கு சென்றார். போர் முதலில் இஸ்ரேல் தரப்பிலிருந்து தொடங்கியது, அமெரிக்கா அதை ஆதரித்தது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது பெட்ரோலிய அமைச்சர் பதிலளித்தபோது, ‘நமக்கு 72 நாட்களுக்கு போதுமான எண்ணெய் கையிருப்பு இருக்கிறது. LPG கையிருப்பும் உள்ளது, LNG பற்றாக்குறையும் இல்லை. எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்’ என்றார். ஆனால் விலை குறைந்திருந்தபோது பொதுமக்களுக்கு எந்த பயனும் கிடைக்கவில்லை; எண்ணெய் நிறுவனங்கள் லாபம் பெற்றன. விலை உயர்ந்தவுடன் சிலிண்டர் விலையும் உயர்த்தப்பட்டது. இன்று எரிவாயு சார்ந்த தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. புனேயில் ஒரு சுடுகாடு கூட மூடப்பட்டுள்ளது. இதற்காக அரசு என்ன தயாரிப்புகளை செய்தது?” என கேள்வி எழுப்பினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சவுகத் ராய் கூறுகையில், “எல்பிஜி விலை உயர்ந்துள்ளது; விமான கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன. இது மத்திய அரசின் தோல்வி. பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து சலுகைகள் வழங்கியிருக்க வேண்டும்’’ என தெரிவித்துள்ளார்.

# காரைக்குடி: நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் மீது மண்ணெண்ணெய் குண்டு வீச்சு

## காவல்துறையினர் விசாரணை



காரைக்குடி மார்ச். 12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரத்தின் அலுவலகம் மீது மர்ம நபர் மண்ணெண்ணெய் குண்டு வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தின் விவரம்: காரைக்குடி சுப்பிரமணியபுரம் முதல் வீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரத்தின் அலுவலகம் அமைந்துள்ளது. நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத நபர் ஒருவர், மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட பாட்டிலை அலுவலக வாசலுக்கு அருகே வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தில் எவ்வித பாதிப்போ அல்லது தீ விபத்தோ ஏற்படவில்லை. காலை அலுவலகத்திற்கு வந்த காவலாளி ஆண்டியப்பன், வாசலில் பாட்டில் சிதறல்கள் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து காவல்துறைக்கு தகவல் அளித்தார்.நேரில் ஆய்வு மற்றும் விசாரணை:

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காரைக்குடி போலீசார், காவலாளியிடம் முதற்கட்ட விசாரணை நடத்தினர். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி நேரில் வந்து விபரம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த அசம்பாவிதத்தில் ஈடுபட்ட நபரை உடனடியாக அடையாளம் கண்டு கைது செய்ய அவர் காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்யும் பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.




# மகளிர் தினத்தில் பெண் விவசாயிகளுக்கு ஹெரிடேஜ் ஃபுட்ஸ் பாராட்டு!

மதுரை, மார்ச். 12-

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஹெரிடேஜ் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனம் நாடு முழுவதும் பெண் பால் விவசாயிகளையும் பெண்கள் நடத்தும் பால் கொள்முதல் மையங்களையும் கௌரவித்தது.

மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, ஒடிசா, உத்தரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய 9 மாநிலங்களில் உள்ள 189 குளிர்விக்கும் மையங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிறுவனத்தின் 4,600 பால் கொள்முதல் மையங்களில் 2,000க்கும் மேற்பட்டவை (சுமார் 42%) பெண்களால் நடத்தப்படுகின்றன. மேலும் ஹெரிடேஜ் நிறுவனத்துடன் இணைந்துள்ள 3 லட்சம் விவசாயிகளில் சுமார் 45% பெண்கள் உள்ளனர்.

தெலுங்கானா மாநிலம் ஷாட்நகரில் உள்ள நந்திகாமா கிராமத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுமார் 500 பெண் பால் பண்ணையாளர்கள் பங்கேற்றனர். இதில் கால்நடை சுகாதார முகாம், தீவனம் மற்றும் ஊட்டச்சத்து வழங்குதல் நடைபெற்றதுடன் சிறந்து விளங்கிய பெண் விவசாயிகள் பாராட்டப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் புவனேஸ்வரி, பெண்களின் பொருளாதார முன்னேற்றம் சமூக வளர்ச்சிக்கு முக்கியம் என தெரிவித்தார்.

# ரோபோடிக் அறுவை சிகிச்சையில் புதிய மைல்கல்

## தேவதாஸ் மருத்துவமனையில் 2வது ரோபோடிக் சிஸ்டம் அறிமுகம்



மதுரை, மார்ச். 12-

மதுரை சர்வேயர் காலனியில் உள்ள தேவதாஸ் மருத்துவமனை, தென் தமிழகத்தில் முதன்முறையாக ரோபோடிக் எலும்பியல் அறுவைச் சிகிச்சையை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து தற்போது இரண்டாவது ரோபோடிக் அறுவைச் சிகிச்சை இயந்திரத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த ரோபோடிக் அமைப்பு பொது அறுவைச் சிகிச்சை, இதய மருத்துவம், யூராலஜி, மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம் உள்ளிட்ட பல சிக்கலான மருத்துவத் துறைகளில் துல்லியமான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்த ரத்த இழப்புடன் குறுகிய நேரத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மருத்துவமனை தலைவர் தேவதாஸ் கூறுகையில், உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சேவையை மக்களுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் வழங்குவதே மருத்துவமனையின் நோக்கம் என்றார்.

எலும்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சதிஷ் தேவதாஸ் மற்றும் மருத்துவர் டாக்டர் ஹேமா சதீஷ் ஆகியோர், ரோபோடிக் தொழில்நுட்பம் அறுவைச் சிகிச்சையின் துல்லியத்தை உயர்த்தி நோயாளிகள் விரைவில் குணமடைய உதவுகிறது என தெரிவித்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., விளக்கமளித்தார்

# பணிச்சுமை மற்றும் மன அழுத்தத்தில் காவல்துறை: ஒரு விரிவான பார்வை

மானாமதுரை மார்ச். 12-

சிவகங்கை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையினர், சமீபகாலமாகச் சந்திக்கும் பல்வேறு நெருக்கடிகளால் தங்களின் பணியைத் தொடர முடியாமல் விருப்ப ஓய்வு (Voluntary Retirement) பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

1.தொடர்சம்பவங்களும் கண்காணிப்பு நெருக்கடியும்டந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சாத்தான்குளத்தில் நடந்த உயிரிழப்பு மற்றும் சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோவில் காவலாளி அஜித் குமார், மானாமதுரையைச் சேர்ந்த ஆகாஷ் டெலிசன் ஆகியோரின் மரணங்களுக்குப் பிறகு, காவல்துறையின் செயல்பாடுகள் கடும் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

* பயம் கலந்த பணி: குற்றவாளிகளை விசாரிக்கும் போது கூட, "எந்த நடவடிக்கை பின்னாளில் பிரச்சனையாக மாறிவிடுமோ?" என்ற அச்சத்திலேயே ஒவ்வொரு காவலரும் செயல்பட வேண்டியுள்ளது. இது ஒருபுறம் நல்ல மாற்றமாகத் தெரிந்தாலும், மறுபுறம் காவலர்களிடையே ஒருவித பதற்றத்தை உருவாக்கியுள்ளது.2. நீண்ட நேரப் பணியும் ஓய்வின்மையும்காவல்துறையினருக்குத் தங்களின் அடிப்படைப் பணிகளைத் தவிர, கூடுதல் சுமைகளாகப் பின்வருபவை அமைகின்றன: * தொடர் விழாக்கள்: திருவிழாக் கூட்டங்கள், அரசியல் கூட்டங்கள்.

* பாதுகாப்புப் பணிகள்: தேர்தல், போராட்டங்கள், வி.ஐ.பி பாதுகாப்பு மற்றும் தேர்வுகள். இத்தகைய பணிகளால் நீண்ட நேரம் (Long hours) பணியாற்ற வேண்டியுள்ளது. இதனால் விடுமுறை கூட எடுக்க முடியாமல், குடும்பத்தைப் பிரிய வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இது அவர்களுக்குப் பெரும் மன உளைச்சலை (Mental Agony) தருகிறது.3. உடல்நலப் பாதிப்புகள்தொடர்ச்சியான உடல் சோர்வு மற்றும் மன அழுத்தம் காரணமாக, காவல்துறையினரிடையே பின்வரும் உடல்நலக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன: * ரத்தக் கொதிப்பு (Blood Pressure) * சர்க்கரை நோய் (Diabetes) * மற்றும் பல்வேறு மனநலச் சிக்கல்கள்.4. அரசியல் மற்றும் மேலதிகாரிகளின் தலையீடு

காவலர்களின் மிக முக்கியக் குமுறலாக இருப்பது வெளித்தலையீடுகள் ஆகும். * ஒரு வழக்கில் உண்மையான குற்றவாளியை நேர்மையான முறையில் கைது செய்த பிறகு, அந்த நபரை விடுவிக்கக் கோரி அரசியல்வாதிகள் முதல் உயர் போலீஸ் அதிகாரிகள் வரை சிபாரிசு செய்கின்றனர். * அவர்கள் சொல்வதைக் கேட்காவிட்டால், சமூக வலைதளங்கள் மூலமாகவோ அல்லது பாதிக்கப்பட்டவர்கள் என்ற போர்வையில் போராட்டங்கள் நடத்தியோ காவலர்கள் தண்டிக்கப்படுகின்றனர். "நேர்மையாகப் பணியாற்றுவதற்குத் தண்டனையே பரிசாகக் கிடைக்கிறது" என்பது அவர்களின் வேதனையாக உள்ளது.5. சங்கங்கள் இல்லாத குறையும் கோரிக்கைகளும்மற்ற அரசுத் துறைகளில் தங்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கப் பல சங்கங்கள் உள்ளன. ஆனால், காவல்துறையில் அத்தகைய சங்கங்கள் இல்லாததால், தங்களின் குறைகளை மேலிடத்திற்குக் கொண்டு செல்ல முடிவதில்லை. அரசுக்குக் காவலர்களின் எதிர்பார்ப்பு: * மனநல ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். * பணி நேரத்தைச் சீரமைத்து, மனிதாபிமானமான பணிச்சூழலை உருவாக்க வேண்டும். * மனித உரிமை விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகளை அதிகரிக்க வேண்டும். * பொதுமக்களிடம் நம்பிக்கையை வளர்க்கும் முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்.இந்தச் சூழல் நீடித்தால், அனுபவம் வாய்ந்த பல காவலர்கள் விருப்ப ஓய்வு பெற்றுச் செல்வது துறைக்குப் பெரும் இழப்பாக அமையும் என இச்செய்தி எச்சரிக்கிறது.

# சிறுநீரக நோய்களுக்கு புதிய நம்பிக்கை: ‘ஆன்டிபாடி’ மருந்துகள் - மீனாட்சி மிஷன் விளக்கம்




மதுரை: மார்ச். 12-

சிறுநீரக நோய்களின் சிகிச்சையில் புதிய மாற்றத்தை உருவாக்கும் வகையில் ‘ஆன்டிபாடி’ மருந்துகள் தற்போது பயன்பாட்டில் இருப்பதாக Meenakshi Mission Hospital and Research Centre மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறுநீரக நோய்களுக்கு முக்கிய காரணமாக இருக்கும் Anti-Glomerular Basement Membrane (GBM) எனப்படும் எதிர்ப்பு அமைப்பு தாக்குதல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நோயில் உடலின் எதிர்ப்பு அமைப்பு சிறுநீரகத்தை தாக்குவதால் சிறுநீரக செயல்பாடு பாதிக்கப்படும்.

2026 மார்ச் 11 முதல் 12 வரை உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில், இந்த நோய்களுக்கு புதிய சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்கள் எடுத்துரைத்தனர். தற்போது GLP1 போன்ற மருந்துகள் மற்றும் புதிய ஆன்டிபாடி சிகிச்சைகள் மூலம் நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைப்பதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் சிறுநீரக நோய் (CKD) ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன், மரபியல் காரணங்கள் உள்ளிட்டவை அடங்கும் என்றும் தெரிவித்தனர்.

சிறுநீரக நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்றால் பாதிப்பு குறைக்க முடியும். அதற்காக இரத்த பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, eGFR அளவீடு போன்ற பரிசோதனைகள் அவசியம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் ஆரோக்கியமான உணவு முறையை பின்பற்றி, உடற்பயிற்சி செய்து, சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்தால் சிறுநீரக நோய்களைத் தடுக்க முடியும் என்றும் சிறுநீரகவியல் துறை தலைவர் மற்றும் உதவி நிலை நிபுணர் டாக்டர் சம்பத்குமார் சிறுநீரக அறுவை சிகிச்சை பிரிவின் தலைவர் முதுகலை நிபுணர் டாக்டர் ரவிச்சந்திரன் மருத்துவ நிர்வாகி டாக்டர் கண்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161